# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1347/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | மருதாய் | க–பெ | முருகன் |
| ஊர்: | : | கோட்டையூர் | சமயம்: | |
| வயது: | : | 47/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | சித்தாள் வேலை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.08.2025**

**எதிரி ஆஜர்.**

---------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை.**

நான் தற்சமயம் கோட்டையூரில் வசித்து சித்தாள் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது உறவினர். வழக்கு சம்பந்தமாக ஆஜர் எதிரியுடன் தற்சமயம் சமரசம் செய்து கொண்டு சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன். **சமாதான மனுவில் உள்ள கையொப்பம் அசாஆ 1. புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அசாஆ 2.** வழக்கு சமயத்தில் ஆஜர் எதிரியானவர் என்னை அருவருக்கத்தக்க வார்த்தைகளால் திட்டியோ கொலை மிரட்டல் விடுத்தோ அடித்து காயப்படுத்தவோ இல்லை. எதிரி மீது இருந்த முன்விரோதத்தின் காரணமாக தவறுதலாக புகார் அளித்துவிட்டேன். வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலீசார் விசாரணையில் கடந்த 29.09.2020 அன்று தோட்டத்திற்கு வேலைக்கு சென்றதாகவும் எதிரி அங்கு வந்து மாலை 6.00 மணியளவில் தங்கள் தோட்டத்திற்கு வரக்கூடாது என்று கீழ்நோக்கிய வார்த்தைகளால் திட்டி அருகில் கிடந்த கட்டுக்கம்பியைக்கொண்டு தனது இடது நெற்றியில் அடித்து அதனால் தனக்கு இரத்த காயம் ஏற்பட்டதாகவும் அருகில் இருந்தவர்கள் வந்தவுடன் மேற்படி ஆயுதத்தை காட்டி கொலை செய்துவிடுவதாக மிரட்டி சென்றதாகவும் கானாடுகாத்தான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசாரிடம் நடந்த விபரங்களை சொல்லி எதிரிமீது நடவடிக்கை எடுக்குமாறு சொல்லிவிட்டு தற்போது எதிரி தனது உறவினர் என்பதால் அவருடன் சமரசம்செய்து கொண்டு உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.08.11 19:59:20 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி